Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

தனிப்பிரதி ரூ. 5/-
Reg. No. KKI/63/2015-2017

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 63 பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே, உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன் சங்.123:1 ஏப்ரல் 2017 No.4

இந்த மணி நேரத்திற்கான ஒரு வார்த்தை தேவனிடமுண்டு

God has a word for this hour

மானிட சரித்திரத்தில் இது மிகவும் முக்கியமான ஒரு வேளை. உலகில் எத்தனையோ இயக்கங்களிருக்கின்றன. ஆனால் எனது கேள்வி ஆண்டவருக்கு இந்த வேளைக்கான ஒரு திட்டம் இல்லையா? சபைக்கு எந்த செய்தியுமில்லையா? இந்த வேளையில் ஆவிக்குரிய விடுதலைக்கான கரிசனையுடைய வார்த்தை ஏதேனும் ஆண்டவரிடமிருந்து வரவில்லையா? இல்லையெனில் சரித்திரத்திலேயே இப்போதுதான் முதன் முதலாக ஒரு மிகப் பெரிய இக்கட்டான நிலை பூமியில் ஏற்பட்டுள்ளது.

தேவன் ஜலப்பிரளயத்தால் உலகத்தை அழிக்கு முன்னால் தமது எச்சரிப்பின் செய்தியை நோவாவின் மூலமாகக் கொடுத்தார். தேவன் எகிப்தை நியாயம் தீர்த்தபோது மோசேயையும் ஆரோனையும் அனுப்பி பார்வோனுக்கு தெய்வீக வெளிப்பாட்டினை அவர்கள் உதடுகளின் மூலம் காண்பித்தார். எலியா, ஏசாயா, எரேமியா போன்றவர்களை இக்கட்டான காலங்களில் தேவன் எழுப்பி இஸ்ரவேலிலும் யூதாவிலும் செய்தி கொடுத்தார். அவர்கள் வாழ்ந்த காலங்களுக்கான தேவ செய்தியை மக்களுக்குக் கூறினார். எபி.11:7; யாத்.5:14, 1ராஜா. 17:1 ஆகிய வசனங்களைப் படிப்போம்.

இதுபோல இந்த காலத்திற்கான வார்த்தையும் தேவனிடமிருக்கிறது.

மனந்திரும்புதலுக்கான அழைப்பு!

நாம் பயபக்திக்குரிய ஒரு வேளையில் வாழ்ந்து வருகிறோம் என்பதையும் நம்மை தேவனிடம் அழைத்துச் செல்லும் ஒரு எழுப்புதல் தேசத்திற்கு மிகமிக அவசியம் என்பதையும் மக்கள் உணர்ந்து விழித்தெழும்பும் காலம் வந்து விட்டது. தேவனுக்கு நேராக மன்றாட்டு அலைகள் எழும்பி தேவனுடைய இரக்கங்களுக்காகவும் சபைகளின் மீது புதிய பெந்தெகொஸ்தே பொழியப்படவும் ஜெபிக்க ஆரம்பித்தாயிற்று.

அன்று இஸ்ரவேலருக்கு நடந்ததே இன்று நமக்கும் நடக்கிறது. ஆவிக்குரிய வலிமை சபைகளில் குறைபடுவதை நாம் உணரும்போது அதற்கு அடிப்படைக் காரணம் சபையின் பாவம் என்பதை மறுக்க முடியாது. இன்னும் சற்று கவனித்தால் இன்றைய உலகின் பயங்கர நிலைகளுக்குக் காரணம் தனிப்பட்ட கிறிஸ்தவர்களின் பாவம் என்றால் மிகையல்ல. எனவே எங்குமுள்ள மக்கள் மனந்திரும்பும்படியாக அக்கினிமயமான செய்திகளை தூய ஆவியால் ஏவப்பட்டு பயமின்றியும் விளைவுகளுக்கு அஞ்சாமலும் பிரசங்கிக்கிறவர்கள் இன்று தேவை.

அறிக்கை பண்ணப்படாத பாவங்கள்

மனந்திரும்புதல் இந்தக் காலத்திற்கான தேவ திட்டமாக இருந்தால் லௌகீகத்திலும், ஜெபக் குறைவிலும், நிர்விசாரத்திலும், பயங்கர தூக்க மயக்கத்திலும் மூழ்கியிருக்கும் கிறிஸ்தவர்களில் தான் ஆரம்பிக்க வேண்டும். அவர்கள் தங்கள் பதவி, உயர்நிலைகள், சபையின் சண்டைகள், சபைப் பிரிவின் காரணமான பொறாமைகள் ஆகிய மாமிச வேட்கைகளிலிருந்து மனந்திரும்ப வேண்டும். பாவ உணர்வு பெற்று, தேவ பிள்ளைகளின் அறிக்கை செய்யப்படாத பாவங்களால் சபையின் சூழல் குளிரடைந்து மக்கள் தூரமாக்கப்படுகிறார்கள்.

இன்று பிரசங்க பீடங்களிலிருந்து சொல்லப்படும் செய்திகள் இடிமுழக்கம் போலவும், முற்கால தீர்க்கர்கள், கிறிஸ்துவின் அப்போஸ்தலர் ஆகியோர் பேசியது போல வல்லமையும் அக்கினியும் நிறைந்து சுட்டெரிக்கிறவைகளாகவுமிருக்க வேண்டும். தேவ ஜனங்கள் லவோதிக்கேயா சபையின் தூக்கத்திலிருந்து விழித்தெழும்பி உலகம், சுயம் ஆகிய வற்றைக் களைந்து விட்டு, ஏமாற்றுதல் மாய்மாலம் ஆகியவற்றையும் விட்டு விட்டு உபவாசத்தோடும், கண்ணீரோடும் நொறுங்கிய உள்ளத்தோடும், பாவ அறிக்கையோடும் ஆண்டவரிடத்தில் முழு இருதயத்தோடும் திரும்புவது மிகவும் அவசியம்.

உன்னதப்பாட்டு 6:4-ல் கூறப்படும் 'கொடிகள் பறக்கும் படையைப் போல கெடியான' திருச்சபை எங்கே? **ஸ்காட்லாந்த் தேசத்தின் இரத்தம் சிந்தும் அரசியான மேரியின் தீய ஆட்சிக்கு எதிராக நடுக்கத்தையும் திகிலையும் ஏற்படுத்திய ஜான் நாக்ஸ் போன்ற தேவ பிள்ளைகளின் ஜெபம் எங்கே?** "உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்" அப்.17:6 என்று பகைவர்கள் கூறுமளவிற்கு சுவிசேஷம் பரிசுத்த ஆவியின் வல்லமையோடும் அபிஷேகத்தோடும் எங்கே கூறப்படுகிறது?

இன்று ஏன் இவைகள் நடைபெறவில்லை. காரணம் தேவ பிள்ளைகளின் வாழ்வில் காணப்படும் தோல்வி தான். பாவத்தை அவர்கள் தாங்களே சமாளிப்பதும், தழுவிக் கொள்வதும் சாதாரணமாகி விட்டது. இது ஒரு பெரிய பாவமாக இல்லாமலிருக்கலாம். ஆனால் சில சிறு சிறு பாவங்கள் கூடி கிறிஸ்துவின் மேலுள்ள அன்பைத் தணித்து ஆத்துமாக்கள் பேரிலுள்ள வாஞ்சையையும் இழக்கச் செய்து விடுகின்றன. நமது ஆவிக்குரிய காதுகளை அவை மந்தப்படுத்தி தேவ சத்தத்தைக் கேட்கக் கூடாமலாக்கி விடுகின்றன. நமது ஆவிக்குரிய கண்கள் குருடாக்கப்பட்டபடியால் அறுவடைக்குப் பக்குவமடைந்த நிலங்களைப் பார்க்க முடியாமலும், நமது கரங்கள் விறைத்துப் போய் சேவை செய்ய முடியாமலுமாக்கி விடுகின்றன. (உன்.2:15, பிர.10:1; 1கொரி.5:6, கலா.5:9)

"அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" (மத்.7:20)

"திராட்சத் தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறு நரிகளையும் நமக்குப் பிடியுங்கள்" உன்.2:15.

நிறைவான அறுவடையைப் பெற்றுக் கொள்ள குழிநரிகளையும், சிறுநரிகளையும் பிடிக்க வேண்டும். அவை களங்கமற்றவைகளாகவும், கேடற்றவைகளாகவும் தென்பட்டாலும் அவை கனிகளைக் கெடுக்கின்றன. சிறு பாவங்களும் உலகத்தோடுள்ள பொருந்துதல்களும், மாம்சம், பிசாசு ஆகிய அனைத்தும் நமது பயன்படும் தன்மைகளை அழித்து விடுகின்றன. எனவே அவை கர்த்தருடைய திராட்சத் தோட்டத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்.

இவைகளை அறிக்கை செய்து விட்டு விடுவோம். தேவன் நம்மை ஆராய்ந்து பார்க்கவும், ஆவியானவர் நம்மை முற்றிலும் சோதித்து அறியவும் நாம் அனுமதித்தால் நாம் ஒரு ஆவிக்குரிய சுத்திகரிப்பின் தேவையோடிருக்கிறோம் என்பதைக் கண்டு ஆச்சரியமடைவோம். (சங்.139:23,24; 1நாளா.28:9)

நம்மில் சிலர் இவ்வாறு பரிசோதனை செய்யும்போது தேவனுக்கு முதலிடம் கொடாமல், தனிப்பட்ட விருப்பங்கள், மாம்ச இச்சைகள், நண்பர்களின் ஆசைகள், உறவினரின் நெருக்கங்கள் ஆகியவற்றிற்கு முதலிடம் கொடுத்து தேவனுக்கு இரண்டாவது இடம் கொடுத்திருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955-1999)

முகவரி: வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் 629 001
Mobile: 95432 21008 e.mail:varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாக்குத்தத்தம்

உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன் *ஏசாயா 38:5.*

Thus saith the LORD, the GOD of David thy father, I have heard thy Prayer, I have seen thy tears.

வாசகருக்கு என் அன்பு கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதான மும் உண்டாவதாக.

2017-ம் ஆண்டு ஏப்ரல் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். இந்த ஆண்டு நிறைவுபெற இன்னமும் 8 மாதங்கள் மாத்திரம் உண்டு என்று அடியான் எழுதினால் நீங்கள் ஆச்சரியப்பட மாட்டீர்கள். வருடங்கள் வரும், போகும்; ஆனால் தேவனோ அநாதியாய் என்றென்றைக்கும் இருக்கிறார் சங்கீதம் 90:2.

தேவ ஒத்தாசையோடு நாம் நடத்தும் அனைத்து உபவாச ஜெபங்களிலும் தேவ ஜனங்களை பார்த்து அநேகம் கேள்விகள் கேட்பதுண்டு. அதில் ஒன்று, Are you kneeled down in your knees *நீங்கள் முழங்காலில் நிற்கிறீர்களா? 2நாளாகமம் 6:13. தேவன் ஒரு மனிதனைப் பார்த்து: "***உன் ஜெபத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்***" என்று சொல்கிறார். என்ன ஆச்சர்யமான தேவன்! என்ன ஆச்சர்யமான ஜெபம்!*

இந்த மாத ஆசிரியர் கடிதத்தில் நடந்து முடிந்த உபவாச ஜெபங்களைப் பற்றியும், நடக்க போகிற உபவாச ஜெபங்களைப் பற்றியும் சில விபரங்களை எழுதுகிறேன்:

I சேலம் **ஆத்தூர்** உபவாச ஜெபம் மிகவும் நேர்த்தியாய் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆலயம் நிரம்ப பெண்கள் இருந்தார்கள். எனவே சிலர் ஆண்கள் பகுதியிலும் அமர்ந்தி ருந்தார்கள். **உபவாச ஜெபம் மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது.** நமது ஒழுங்கின்படி உத்திரபிரதேசம் T.L.M., குஜராத் NIMS, I.E.M. சார்பாக தேசத்திற்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. கடைசியாக 3.30 மணி முதல் 4.00 மணி வரை 5 **விசேஷ ஜெப குறிப்புகளுக்காக** ஜெபித்தோம்.

1. (மத்திய, மாநில அரசுகளுக்காக)
முக்கியமாக தமிழ் நாட்டு அரசாங்கத்திற்காக

i. நிலையான அரசு
ii. ஊழலற்ற அரசு
iii. சமய சார்பற்ற அரசு
(வேத பாகம் 1தீமோ.2:2)

இந்த ஜெபக் குறிப்பிற்காக சபையின் போதகர் மேடைக்கு வந்து மிகவும் பாரத்தோடு ஜெபித்தார்கள்.

2. வறட்சிக்காக

பயிர்கள் கருகி போனது, விவசாயிகள் தற்கொலை, எல்லா அணைகளும் வறண்டு போயிற்று, குடிநீர் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. (வேத பாகம்: 2நாளா.7:13,14)

இந்த குறிப்புக்காக ஒரு சகோதரி முன்னால் வந்து பாரத்தோடு ஜெபித்தார்கள்.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம், இந்த கடிதத்தை எழுதும் மார்ச் 5,6,7 தியதிகளில் குமரி மாவட்டத்தில் இரவு முழுவதும் மழை பெய்தது. மாத்திரமல்ல, கீழ்காணும் செய்தியை பத்திரிகை ஒன்று வெளியிட்டது:

திற்பரப்பு அருவியில் ஆர்ப்பரித்து கொட்டும் தண்ணீர்

'குமரியின் குற்றாலம்' என்று அழைக்கப்படும் திற்பரப்பு அருவியில் கடந்த சில தினங்களாக தண்ணீர் ஆர்ப்பரித்து விழுகிறது. நேற்று இந்த அருவியில் தண்ணீர் கொட்டியதை யும், அதில் சுற்றுலாப் பயணிகள் சிலர் ஆனந்தக்குளியல் போட்டதையும் படத்தில் காணலாம். 10-3-2017

தேவன் மாறாதவர், அவருடைய வாக்குத்தத்தங்களும், நிபந்தனைகளும் கூட மாறாதவை (2நாளா.7:14 பார்க்க).

(7-ம் பக்கம் பார்க்க)

எழுப்புதலுக்காக இதய கதறல் 2017
(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

மாதம்	தேதி	இடம்
ஏப்ரல்	15-04-2017 3-வது சனி	ஏரல் வட்டார எழுப்புதல் ஜெப ஐக்கியம், ஏரல், தூத்துக்குடி
மேய்	20-05-2017 3-வது சனி	புது வாழ்வு எல்லாம் இயேசுவுக்கே திருச்சபை T.R. பட்டினம், காரைக்கால்
ஜூன்	03-06-2017 1-வது சனி	True Life Mission, நாகர்கோவில்
ஜூலை	15-07-2017 3-வது சனி	கன்மலை ஆராதனை சபை, நெல்லிக்குப்பம், கடலூர்
ஆகஸ்ட்	19-08-2017 3-வது சனி	இயேசு நம்மோடு சபை, கருங்கல், குமரி மாவட்டம்
செப்டம்பர்	16-09-2017 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை, மணலி, சென்னை
அக்டோபர்	07-10-2017 1-வது சனி	மாரநாதா ஜெபவீடு, பொள்ளாச்சி
நவம்பர்		காந்தி நகர் C.S.I. சபை திருநெல்வேலி
டிசம்பர்	02-12-2017 1-வது சனி	I.P.C சபை மார்த்தாண்டம்

எழுப்புதலுக்காக இதய கதறல் 2018
(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

மாதம்	தேதி	இடம்
ஜனவரி		
பிப்ரவரி	17-02-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை கோயம்பத்தூர்
மார்ச்		
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		
செப்டம்பர்		
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

வருட சந்தா ரூ.100.00

சந்தா, காணிக்கை, கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு, நாகர்கோவில்-629 001.

VARUKAYIN THOOTHAN
Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008

வங்கி கணக்கு எண்

VARUKAYIN THOOTHAN
A/c. No.:431521036
Indian Bank,
W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக எங்களுக்கு தெரிவியுங்கள்.
email :
varukayinthoothan@hotmail.com

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்மில் சிலர் தேவனுக்கு எதிராக நேரடியாகவே பாவம் செய்து அவரது சித்தத்திற்கு எதிராக முரட்டாட்டம் பண்ணி அவர் சத்தத்தைக் கேளாதபடி நமது காதுகளை அடைத்துக் கொண்டு அவரது சேவையை செய்யாமலிருக்கிறோம்.

இவைகளுக்கு மேலாக சுயநல வாழ்வு, சுயசித்தம், சுயத்தைப் பிரியப்படுத்துவது, மகிமைப்படுத்துவது, சுய நாட்டம், சுய பரிதாபம், சுய நம்பிக்கை, சுய அன்பு, நாட்டங்கள், தொிந்தெடுப்புகள் போன்றவற்றால் தூய ஆவியை துக்கப்படுத்தி தேவ அழைப்புக்கு பதில் கொடுக்க நம்மைத் தகுதியற்றவர்களாக்கி விட்டோம்.

நம்மில் சிலர் கோபமடைகிறவர்களாகவும், எரிச்சலடைகிறவர்களாகவுமிருக்கிறோம். நம்மில் மன்னியாமையின் ஆவியும், பொறாமையும், பகைமையும் காணப்படுகிறது *(யாக்.3: 14-18)*. இன்னும் சிலரிடம் இரகசிய பாவங்களுண்டு. ஆனாலும் அவை தேவனுக்கு மறைவானவைகளல்ல *(சங்.19:12 -13)*. மேலும் சாவுக்கேதுவான பாவங்களாகிய வீண்பேச்சு, பின்னால் பேசுதல், கதை கட்டுதல் *(யாக்.3:2-13; 2கொரி. 12:20)* போன்றவைகளும் காணப்படுகின்றன. இவை எல்லாவற்றையும் தேவன் வெறுக்கிறார். அவை தேவ ஆசீர்வாதங்களைத் தடுத்து, அவர் நமக்கும் குடும்பங்களுக்கும் தரும் பதில்களைத் தடுத்து நமது சமுதாயமும் தேசமும் உலகமும் வாழ்வடையாதபடி செய்கின்றன. இப்பாவங்கள் அனைத்தையும் தேவன் வெறுக்கிறார். ஏசா. *59: 1-4* வசனங்களைப் படிக்க.

நமக்கு தேவன் தேவை. உன்னத மானவரின் எழுப்புதல் நமக்கு மிகமிக அவசியம். இந்தக் கடைசி ஆபத்தான நாட்களில் ஒரு மிகப் பெரிய தேவ சந்திப்பு இரக்கமாக அளிக்கப்படாமல் தப்புவதற்கான மார்க்கமில்லை. அழிவுகள் நமக்கு எச்சரிப்பை அளிக்கின்றன. தேவ வசனம் நம்மை எச்சரிக்கிறது. தூய ஆவியானவரும் நம்மை எச்சரிக்கிறார். "நீதியைச் செய்ய கர்த்தருக்கு வேளை வந்தது; அவர்கள் உம்முடைய நியாயப் பிரமாணத்தை மீறினார்கள்" சங்.119:126. "....கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும்" ஆபகூக் *3:2*.

ஆவியானவர் ஊற்றப்படும் காலம் இது என நான் விசுவாசிக்கிறேன். ஆனால் தேவனுடைய மிகப் பெரிய திட்டம் கிருபையாக அவரது ஜனமாகிய நமது முழுமையான ஆத்துமாவின் பதிலை சார்ந்திருக்கிறது. எனவே அவரது சந்திப்பிற்காக உற்சாகமடைந்த நாம் நமது இருதயங்களில் எழுப்புதல் ஏற்பட, தொடர்ந்து சபையிலும், சமுதாயத்திலும், தேசத்திலும், உலகமெங்கும் அது பரவ நாம் நம்மில் முழுமையான பரிசோதனை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இரட்சிப்பும் விடுதலையும் ஏற்பட நாம் நம்மைத் தாழ்த்தி தேவனுடைய முகத்தை மனந்திரும்புதலோடும் விசுவாசத்தோடும் தேட வேண்டும்.

நினிவேயின் இரட்சிப்பைக் குறித்து சிந்திப்போம். அது பூர்வ கால பொல்லாத புறஜாதி பட்டணம். தேவனுடைய தீர்க்கனாகிய யோனா அழிவின் செய்தியோடு அனுப்பப்பட்டான். 'இன்னும் 40 நாட்களில் நினிவே அழிக்கப்படும்' யோனா.*3:4*. இரக்கத்தின் வாக்குத்தத்தம் அளிக்கப்படவில்லை. ஆனால் அரசர் முதல் ஜனங்கள் வரையிலும் 'தேவன் இரக்க சிந்தையற்ற வராயிராதிருந்தால் இந்த எச்சரிப்பை அனுப்பியிருக்க மாட்டார்' என்று சிந்தித்திருக்கலாம். எனவே அவர்கள் இரட்டை உடுத்திக் கொண்டு தூளிலும் சாம்பலிலும் உட்கார்ந்து உபவாசத்தோடு தேவனை நோக்கிக் கதறி ஜெபித்தார்கள். தேவன் இரக்கமுள்ளவராய் தமது நியாயத்தீர்ப்பைத் திரும்பப்பண்ணினார்.

ஆகவே புறஜாதியாரான நினிவே மக்களுக்கு இரங்கின ஆண்டவர், நமது பாவங்களை விட்டு விட்டு அவர் வந்து நம்மேல் நீதியை வருஷிக்கப் பண்ணு மட்டும் அவரைத் தேடுகிறவர்களுக்கு அவர் பதிலளிப்பது நிச்சயம் ஓசி.*10:12*.

தேவனோடு

வேதபுத்தகம் தேவன் குறைவான எண்ணிக்கையால் வெற்றி தருகிறவர் என்பதை விளக்கிக் காண்பிக்கிறது. உலகத்தின் பார்வையில் புத்தியற்றவர்களும், பெலவீனரும் ஒதுக்கப்பட்டவர்களாயிருப்பவர்களும் தேவனோடு இணையும்போது அவர்கள் பலசாலிகளும் வெற்றி வீரருமாய் மாறுகிறார்கள். அவர்கள் சரித்திரத்தின் போக்கை மாற்றி தேசங்களின் முகத்தை மாற்றியிருக்கிறார்கள். பெலனில்லாத நிலையில் மிகப்பெரிய பணிகளை ஆற்றியிருக்கிறார்கள்.தாக்கமற்ற அவர்கள் தங்கள் தலைமுறையினரை மாற்றியமைத்திருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல், லூதர், வெஸ்லி போன்றவர்கள் இந்த அட்டவணையில் அடங்குவர். அவர்களுடைய கோத்திரத்தார் இன்றும் வாழுகிறார்கள்.

இன்று கிறிஸ்தவர்கள் அனைவரும் கிறிஸ்துவுக்காக எழும்பி நின்றால் எப்படியிருக்கும்! நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து உபவாசித்து இரவும் பகலும் ஜெபித்தால் எதிரிகளை மேற்கொள்ள முடியும். தேவனோடும் பிறரோடும் ஒப்புரவானால் நிச்சயமாக எழுப்புதல் ஏற்படுமே.

எனவே இன்று நம்மைச் சுற்றிலும் காணப்படும் தீமைகளுக்கும், ஆபத்துகளுக்கும் ஒரு முடிவு கட்டுவோம். அதிக அளவாக உபவாசித்துக் கண்ணீரோடு ஜெபிப்போம். இன்றே ஆரம்பம் செய்வோம். இப்படிச் செய்தால் எக்காலத்திலுமில்லாத ஒரு எழுப்புதலைப் பெற முடியும்.

எழுப்புதல் என்பது தேவனுக்குக் கீழ்ப்படிதலுக்கான புதிய ஆரம்பம் *லேவி.26:3-8 படிக்க.*

தூய்மையாய் வாழ்வதற்கான வழி

The way to be Holy
Horatius Borar (1808-1889)

"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" *1பேதுரு.1:15*.

கிறிஸ்துவின் சாயலுடன் வாழ்வது பரிசுத்தம் - அவர் பரிசுத்தத்திற்குப் பிரதிநிதியும், திருஷ்டாந்தமும், மாதிரியுமாயிருக்கிறார். பரிசுத்தமாயிருக்கிறவர்கள் அவருடைய சாயலையுடையவர்களாயிருக்கிறார்கள்.

பரிசுத்தமாயிருக்க விரும்புகிறவர்கள் கிறிஸ்துவைப்போல் இருக்க வேண்டும். கிறிஸ்துவைப் போலிருக்க விரும்புகிறவர்கள் 'ஆவியினால் நிறைந்து' காணப்பட வேண்டும் (எபே.5:18): கிறிஸ்துவின் சிந்தை இருக்க ஒருவர் அவரைப் போன்ற அபிஷேகத்தைப் பெற வேண்டும். அவரைப் போல் ஆவியானவர் உள்ளே வாசம் பண்ணி உள்ளே கிரியை செய்ய வேண்டும். ஆவியானவரின் வாழ்வு, விசுவாசம், உண்மை, விடுதலை, வலிமை மற்றும் தூய மகிழ்ச்சி ஆகியவை காணப்பட வேண்டும். சத்துவம் நிறைந்த ஆவியானவரால் நாம் உயிர்ப்பிக்கப்படுகிறோம். ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்படுகிறோம் *(2தெச.2:13; 1பேதுரு.1:2)* அவர் நமது விருந்தாளியாக நம்மில் அவரது பணியைச் செய்கிறார். நம்மில் வாசம் பண்ணாமல் அவர் கிரியை செய்வதில்லை; கிரியை செய்யாமல் அவர் வாசம் பண்ணுவதுமில்லை *(2தீமோ.1:14)*. அவர் வெறும் தாக்கத்தை மட்டும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் நமக்குள் வந்து நம்மில் வாசம் செய்து 'அவரது தோழமையால் நாம் நிரம்பும்படி' செய்வதோடு அவரது வல்லமையால் ஆட்கொள்ளப்பட்டு முற்றிலும் 'மறுரூபமடைகிறோம்'. அவரது தெய்வீக கரத்தின் தடுக்க முடியாத தொடுகையால் நம்மை அழுத்தி, அவரது சொந்த சக்தி வாய்ந்த வலிமையை நம்மில் ஊடுருவச் செய்கிறார். அவரது சொந்த பரிசுத்தத்தையும், ஜீவனையும் நம்மில் நிரப்புகிறார். நாம் எதிர்க்கிறவர்களாயிருப்பினும், கற்றுக் கொள்ள விரும்பாதவர்களாயிருப்பினும் விசுவாசமற்றவர்களாயிருப்பினும் அவர் அதைப் பொருட்படுத்துவதில்லை.

கிறிஸ்துவைப் போலாக இன்னும் அதிகமாக அவரைக் கற்றுக் கொள்ள வேண்டும்: பரிசுத்தமாய் வாழ அதற்கான முயற்சி மட்டும் போதாது, பலவந்தத்தாலும் இது கூடாது. எனவே நாம் கர்த்தரின் மகிமையை உற்று நோக்கி அவரது சாயலைப் பெற்று மகிமையின் மேல் மகிமையடையலாம் *2கொரி.3:18*. நமது நெருங்கிய நண்பராக பரிசுத்த தேவன் இருக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவுடனுள்ள தோழமை நம்மை அவரைப் போலாக்க முடியும்.

பரிசுத்தமாய் வாழ விரும்புகிறவர்கள் வசனத்தில் தங்களை சாய்த்துக் கொள்ள வேண்டும்: வேத வசனம் ஒளியை ஒவ்வொரு பக்கத்தின் மூலமாகவும் வெளிப்படுத்தும் ஒளி வீசும் சூரிய வெளிச்சம் போன்றது. சத்தியத்தின் மூலம் நாம் பரிசுத்தம் பண்ணப் படுகிறோம் யோவான் *17:17*. நமது ஆத்துமாக்களைத் தொடர்ந்து இந்த வெளிச்சத்திற்கு நாம் நம்மைத் திறந்து அளிப்போமானால் நாம் "ஒளியின் பிள்ளைகளாக' மாற முடியும். ஏனெனில் தீமைக்கு எதிராக தெய்வீக சத்தியம் வல்லமையானது. இது 'ஆவியின் பட்டயம்'. இதன் கூரிய புறத்தால் ஆயிரம் எதிரிகளையும் வெட்டி வீழ்த்தி முன்னேற முடியும். இது மோசேயின் கையிலுள்ள கோலைப் போல சிவந்த சமுத்திரத்தைப் பிளக்கவும், அமலேக்கியரைத் தோற்கடிக்கவும், கற்பாறையிலிருந்து தண்ணீரைப் புறப்படச் செய்யவும் முடியும். எந்தத் தீமையும், எந்த சத்துருவும் உள்ளிருந்தோ வெளியிலிருந்தோ வசனத்தை மேற்கொள்ள முடியாது. மோசேயின் கரத்திலிருந்த கோல் ஒரு சாதாரண சிறு மரத்துண்டு மட்டுமே. ஆயினும் அதன் மூலம் பலத்த காரியங்கள் நடப்பிக்கப்பட்டன. கம்பத்தின் மேல் வைக்கப்பட்ட சர்ப்பம் எதனால் செய்யப்பட்டது? ஒரு சிறு துண்டு வெண்கலத்தால், ஆயினும் ஆயிரக் கணக்கான மக்கள் அதை நோக்கிப் பார்த்து குணமடைந்தனர். காரணம் துண்டு மரமும், துண்டு வெண்கலமும் சர்வ வல்லவரோடு தொடர்புடையவைகளாய் பரலோக மின்சக்தியைக் கடத்துகின்றன. எனவே வேதபுத்தகம் எல்லாவற்றிற்கும் மேலான புத்தகமாக நமக்கிருக்க வேண்டும். நம்மைக் குணமாக்கவும், உயிர்ப்பிக்கவும், பலப்படுத்தவும், ஆறுதல்படுத்தவும், பரிசுத்தப்படுத்தவும் வேத புத்தகம் ஏதுவாயிருக்கிறது.

பரிசுத்தமாயிருக்க வேண்டுமானால் யுத்தம் செய்ய வேண்டும்: பரிசுத்தமாய் வாழ விரும்புகிறவர்கள் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராட வேண்டும். அதற்கு மாம்சத்துக்குரிய போராயுதங்கள் பயன்படுவதில்லை *(1தீமோ.1:18; 6:12; 2கொரி.10:4)*. இதற்குத் தேவையானது முழங்கால் யுத்தம். ஜெபத்தோடு விழிப்புடனிருக்க வேண்டும் *(1பேதுரு 4:7)*. அவன் அதிகாரங்களோடும் வல்லமைகளோடும் போராட வேண்டும். கர்த்தருக்குள் பெலனோடு அவரது சத்துவத்தின் வல்லமையோடு தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்திருக்க வேண்டும். எபேசி.*6:13-17* வசனங்களில் இந்த ஆயுதங்களின் பெயர் கூறப்பட்டுள்ளது. இந்தப் போர் பெலசாலிகளுக்குரியதல்ல, பலவீனருக்குரியது. இது பெலவீனத்தில் பயன்படுத்தப்பட்டு சத்துவமில்லாதவர்களுக்கு வெற்றியைத் தருகிறது. இந்த போராட்டத்தில் காலமும் சந்தர்ப்பமும் கிடையாது. ஆனால் நாம் நம்மை நேசிக்கிறவராலே முற்றிலும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். அவர் பன்மடங்கு வெகுமதியைத் தர காத்திருக்கிறார் "ஜெயங் கொள்ளுகிறவனுக்கு" வெளி.*2:7*. இவ்வுலகில் சாத்தானின் பகைமை நமக்கிருந்தாலும் தூதருடைய பணிவிடையும் நமக்குண்டு *(எபி.1:14)*. தூய ஆவியான வரின் வல்லமையும் நமக்கு அளிக்கப் படுகிறது எபே.*1:13*.

பரிசுத்தமாயிருக்க விழித்திருக்க வேண்டும்: "விழித்திருங்கள், விசுவாசத்தில் நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள்; திடன் கொள்ளுங்கள்" *1கொரி.16:13*. இரவின் பிள்ளைகள் தூங்கவோ, இருளில் இடறவோ செய்யட்டும். ஆனால் பகலின் பிள்ளைகளாகிய நாம் ஜாக்கிரதையுடனிருந்து சோதனை நம்மை மேற்கொள்ளாமலும், பிசாசின் தந்திர வலையில் சிக்காமலும், இந்த உலகத்தின் ஆசைகளில் மயங்காமலும் இருக்க வேண்டும். வெளி.*16:15*-ன்படி விழித்துக் கொண்டிருக்கிறவன் பாக்கியவான். விழித்திருக்கும்போது 'அனேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணுகிறவர்களாயிருக்க' வேண்டும் *(1தீமோ.6:12)*. நாம் தரித்திருக்கும் முத்திரையைக் குறித்து வெட்கப்படாமல் வேகமாகவும் பொறுமையாகவும் நமது ஓட்டத்தை ஓடுவோம். பாரமான யாவற்றையும், நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் விட்டு விட்டு ஓடுவோம் *(எபி.12:1)*. நீதியையும், தேவ பயத்தையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சாந்த குணத்தையும் பின்பற்றுவோம் *(1தீமோ.6:11)*. நமது கண்கள் வரப்போகிற கர்த்தராகிய இயேசுவின் மேல் நோக்கமாயிருக்கட்டும் *(தீத்து 2:13)*.

பரிசுத்தமாயிருக்க விரும்புகிறவன் கிறிஸ்துவின் சரீரம் என்ற அளவிலும் தூய ஆவியானவரின் பங்காளி என்ற நிலையிலும் தனது உபாதிப்பினைப் புரிந்து கொள்வது அவசியம்: பரிபூரணத்துவம் இவ்வுலகில் கிடைப்பதில்லை என்ற எண்ணம், பொறுப்பின் உணர்வை பலவீனப்படுத்தவோ. மீட்பின் நாளுக்கென்று முத்திரையிட்ட பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தவோ கூடாது. தனிப்பட்ட முழுமையைப் பெற்றுக் கொள்ள ஒவ்வொரு பரிசுத்தவானும் பொறுப்புடையவன். இயேசுவின் இரத்தத்தால் நாம் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் *(எபி. 13: 12)*. நாம் தூய ஆவியால் பரிசுத்தப் படுத்தப்பட வேண்டும் *1கொரி.6:11*. ஆவியால் நடத்தப்பட வேண்டும் கலா. *5:18*. நாம் தூய ஆவியின் ஆலயமாயிருக்கிறோம் *1கொரி.6:19*. நாம் ஆவியில் நடக்கிறோம் *(கலா.5:16)* ஆவியினால் பேசுகிறோம் *(1கொரி.12:3)* ஆவியில் ஜீவிக்கிறோம் *(கலா.5:25)* தூய ஆவியானவரின் கூட்டுறவு நமக்கு உண்டு *(2கொரி.13:14)*.

கிறிஸ்தவன் எந்தக் காரணத்தாலும் பாவத்தோடு தொடர்பு வைக்கக் கூடாது. அன்பின் ஆவியை உடையவர்களாயிருந்தால் "அன்புடன் அனைத்து துர்க்குணங்களையும், மாய்மாலத்தையும், கெட்ட வார்த்தைகளையும் விட்டு விட்டு, ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல் வேறொன்றிலும் கடன்படாதிருங்கள்" *(ரோமர். 13:8)*. நம்மில் வாசம் பண்ணும் ஆவியானவர் சோம்பலாயிருப்பதில்லை. சும்மாயிருப்பதுமில்லை. அவர் மனித இருதயத்தில் தெய்வீகக் கனிகளை உருவாக்குகிறவர், பூலோக மண்ணில் பரலோகக் கனிகளை உருவாக்குவார். "ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை" கலா.*5:22,23*.

இந்தக் காலத்தின் தீய உலகிலிருந்து *(கலா.1:4)* விடுவிக்கப்பட்டவர்களாகிய நாம் முற்கால பரிசுத்தவான்களைப் போல இவைகளிலிருந்து பிரிந்து வாழ வேண்டும். அவைகள் தீமையற்றவைகளாகத் தோன்றினாலும் நாம் நமது அங்கிகளைக் கறைபடாத படி காத்துக் கொள்ள வேண்டும். நாம் ஜெபம், உறவு ஆகியவற்றின் மூலம் தேவனோடு இணைந்து இக்கால தீமைகளிலிருந்து பாதுகாக்கப்படுவது அவசியம். ஏனெனில் தேவனோடுள்ள நெருங்கிய உறவு ஒன்றே நம்மை உலக உறவினின்று அகலச் செய்யும். நாம் இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக் கூடாது. இரு பாத்திரங்களில் பானம் செய்வதும், இரு தெய்வங்களை வணங்குவதும், இரு மார்க்கங்களைத் தழுவிக் கொள்வதும், இரு மேடைகளில் முழங்கால்படியிடுவதும் தகாது.

பழைய சுயம் எந்த ரூபத்தில் காணப்பட்டாலும் ஜாக்கிரதையாயிருப்பது அவசியம். நாம் ஒரு மெல்லிய மனச்சாட்சியை உருவாக்கி அதன் மூலம் பழைய நம்பிக்கைகள், அகந்தைகள் போன்றவற்றை விட்டு விடுவோம். சிறு பாவங்கள் செய்வது, சிறு கடமைகளில் தவறுவது போன்றவற்றில் ஜாக்கிரதையாயிருந்து காலத்தை ஆதாயம் செய்வோம். ஆயினும் விரைவாக அல்ல அமைதியுடனும், மகிழ்வுடனும், திறந்த மனதுடனும் தயாள சிந்தையுடனும் பிறரைக் குறித்த கரிசனையுடனும் செயல்படுவோம். நாம் உலகத்திற்கெதிராக பல முக்கிய காரியங்களில் புரட்சி செய்ய வேண்டியிருப்பதால் நாம் வேறுபட்ட வாழ்வு வாழ முக்கியமற்ற காரியங்களில் முயற்சிக்க வேண்டிய தில்லை. அதற்காக நாம் சந்திக்கிறவர்களிடம் அன்பு காட்டவும், அவர்கள் அன்பு காண்பிக்கப்பட தகுதியற்றவர்களாயிருந்தாலும் அவர்களை வெறுக்காமலும் நமது உயர்வைக் காண்பிக்காமலும் இருக்க வேண்டும்.

தேவனுடைய உண்மையான மனிதர்களும் மனுஷிகளும்

கிறிஸ்துவின் சீஷர்கள் என்ற நிலையில் நமது சீஷத்துவம் பூரணமாகவும், உறுதியாகவுமிருக்க வேண்டும். அவரோடுள்ள தொடர்பு அவரது சாயலை நமக்குத் தர வேண்டும். நமது வாழ்வு புரிந்து கொள்ளக் கூடிய பிரமாணமாகவும், நமது நடை உத்தமத்தின் அடையாளமாகவும், அழகிய நல்ல அறிக்கையாகவுமிருக்க வேண்டும்.

கிறிஸ்துவின் சத்தியம் பரிசுத்தம் செய்வ தோடு விடுதலையும் தருகிறது. அவரது ஞானம் சுத்தப்படுத்துவதோடு உயிர்ப் பிக்கவும் செய்கிறது. விடுதலையை தூய்மையின்றி ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஞானத்தை பரிசுத்தமின்றியும் சமாதானத்தை உற்சாகமும் அன்பும் இல்லாமலும் பெறுவது சரியல்ல.

நாம் உண்மையுள்ளவர்களா யிருப்போம். நமக்கு உண்மையுள்ளவர் களாகவும், நமது புதுப்பிறப்பிற்கு உண்மையுள்ளவர்களாகவும், நமது புதிய பெயர், நமது சபை, நம்மில் வாசம் பண்ணும் ஆவியானவர், கிறிஸ்து, அவரைக் குறித்த உபதேசம், அவரது வேதபுத்தகம் ஆகியவற்றிற்கு நாம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண் டும். சத்தியத்திற்கு உண்மையுள்ளவர் களாய் அதை நேசிக்க வேண்டும். அது இன்பமாகவும், படமாகவும், புராதன மாகவும் இருப்பதாலல்ல, அது உண்மை யானதாகவும், தெய்வீகமானதாகவும் இருப்பதால் அதை நேசிக்க வேண்டும். அதை பசியோடு உட்கொள்ள வேண்டும். அதனால் நாம் கிருபையிலும், ஆண்டவரை அறிகிற அறிவிலும் வளர வேண்டும்.

நமது ஆவிக்குரிய சட்டம் நாம் வேலை செய்யவும், யுத்தம் பண்ணவும் பெலனடைய வேண்டுமென்பதற்காக அமைக்கப்படாமல் இக்கால தொற்று தலுக்கு (infection) எதிரான நிரூபண மாகவும் இவ்வுலகத்தின் அதிபதியின் நஞ்சிற்கு (poison) எதிராகவுமிருக்க வேண்டும். "ஆகாயத்து அதிகாரப் பிரபு வாகிய ஆவி" எபே.2:2 ஆகாயத்தை மாசு படுத்தியிருக்கிறது. இதற்காக நாம் அப்போஸ்தலன் சொல்லுவது போல பலமான ஆகாரத்தை மட்டுமல்ல (எபி. 5:12-14) மலைப் பிரதேச சோதனைகள், கடினங்கள் ஆகியவற்றையும் அனு பவிக்க வேண்டும். நாம் நம்மை உயிர்ப் பிக்கும் ஆவியானவரின் கரத்தில் ஒப்ப டைப்போம். அவர் நமக்குள் பயனுள்ள வித்தியாசமான, ஆரோக்கிய வாழ்வை அருளுவார். நம்மிலுள்ள தீமை மிகவும் பெலனுள்ளதாயிருப்பதால் சர்வ வல்ல வரால் மட்டுமே வெற்றி பெற முடியும். மனித சித்தத்தின் எதிர்ப்பு மிக வலிமை யானது. தூயவர் ஒருவர் மட்டுமே நம்மை தூய்மையாக்க முடியும்.

உலகத்தில் சுடர்களைப் போல பிரகாசியுங்கள்

மிக உறுதியானதாயிருந்தாலும் மிகவும் அமைதியாயிருப்பது இவ்வுல கில் ஒளி ஒன்றே. அது போல கிறிஸ்த வனும் மிகுந்த பலசாலியும் மகாப் பெரியவனும் அதோடு மிக அமைதியும் பிரகாசமானவனுமாயிருக்க வேண்டும். ஒரு ஒளிக்கதிர் நேர்கோட்டில் செல்வது போல நமது வாழ்வுமிருக்க வேண்டும். நாம் சுடர்களைப் போல பிரகாசித்து ஒளியாயிருக்கிற ஆண்டவரைப் பிரதி பலிக்க வேண்டும்.

நாம் பிரகாசிப்போம்! நட்சத் திரங்களைப் போல பிரகாசிப்போம். அதன் மெல்லிய ஒளி நிச்சயமானதும் தூய்மையானதுமாயிருக்கிறது. மனிதரி டம் 'இது இரவு' என்று காண்பிக்கிறது. அது பகலை ஏற்படுத்த முடியாது. ஆனால் திசை தெரியாதவர்களுக்கு வழிகாட்டுகிறது. சூரியனைப் போல உலகம் முழுவதையும் அது பிரகாச மடையச் செய்ய முடியாது. அதை சூரியன்தான் செய்ய முடியும். சூரியன் நிலப்பரப்பு முழுவதையும் காண்பிக் கிறது. நட்சத்திரங்கள் தங்களை மட்டுமே காண்பிக்கின்றன. எனவே நாமும் நம்மைப் பிறருக்கு ஒளியாகக் காண்பிப்போம். ஒரு நாளில் எல்லாம் முழுமையாகக் காண்பிக்கப் படும், அது மகாப் பெரிய சூரியன் உதிக்கும் நாள். 'இரவு சென்று போயிற்று பகலும் சமீபமாயிற்று' ரோமர் 13:12. நாம் நம்மை ஒளியிலேயே விட்டு விடுவோம். அப்படி விட்டுவிடுவதற்காக முறு முறுக்க வேண்டாம். ஏனெனில் நமது ஒளியில் நித்திய ஒளியாகிய சூரியனால் கிரகிக்கப்படயிருக்கிறது. அவர் பெருக நாம் சிறுக வேண்டும். "இந்த சந்தோஷம் இப்பொழுது என்னில் நிறைவாயிற்று" யோவா.3:29.

"....இருந்தவரும், இருக்கிற வரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமை யுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் . . ." வெளி.4:8.

கொளுந்து விட்டு எரியும் இருதயம் தேவை

Wanted a burning heart

Wesley. L. Duewel

ஒரு கிறிஸ்தவத் தலைவருக்குத் தூய ஆவிக்கு இணையான பதிலாள் எவருமில்லை. அவனுடைய இருதயம் தேவ அன்பாலும் மனித அன்பாலும் கொளுந்து விட்டு எரிய வேண்டும். "தேவன், சபை, உலகம் ஆகியவை கொழுந்து விட்டு எரியும் இருதயங் களைத் தேடுகின்றன - தேவ அன்பா லும், சபையின் மேலுள்ள பாரத்தாலும், தேவமகிமைக்காக வாழ்சிக்கும் உலகத் திற்காகவும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற் காகவும் மற்றும் அழிந்து போகும் ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காகவும் அன்பால் நிரம்பி கொழுந்து விட்டு எரியும் மக்களையே" என்று Dr.ஜார்ஜ் W.பீட்டர்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் "நிர்விசாரம், பொருளா தாரம், குளிர்ந்த நிலை, மற்றும் பரிகாசம் ஆகியவற்றால் நிரம்பிய உலகிற்கு தேவனுடைய பதில் பீடங்களிலும், மேடைகளிலும், வேதபாட வகுப்பு களிலும், வேதகலாசாலைகளிலும் கொழுந்து விட்டு எரியும் இருதயங்கள் மட்டுமே" என்றும் அவர் கூறுகிறார்.

தலைவராயிருக்கிற உங்களுக் குக் கொழுந்து விட்டு எரியும் இருதயம் இல்லா விட்டால் உங்கள் மக்களும் அப்படிப்பட்ட இருதயத்தைப் பெற முடியாது. எனவே அவர்களால் உலகம் எந்த நன்மையும் பெற முடியாது. நமது சமுதாயங்கள் நமது திட்டங்களாலும், அதிகமான செயல்பாடுகளாலும் எந்தத் தாக்கமுமடையவில்லை. சுறுசுறுப்பாக இயங்கும் ஒரு சபை, அன்பான ஒரு சபை அல்லது ஊழியம் செய்யும் சபை கூட கிறிஸ்துவுக்காக எந்தத் தாக்கத்தை யும் ஏற்படுத்த முடியவில்லை. ஆனால் சபை கொழுந்து விட்டு எரிகிறதாகவும், அத்தகைய தலைவர்களையுடைய தாகவும் இருக்க வேண்டும்.

சாமுவேல் சாட்விக், பிரிட்ட னில் உள்ள கிளிஃ கல்லூரி தலைவராய் இருந்தார். அவர் எரியும் முட்செடியா யிருந்தார். அவர் ஆவியால் நிரப்பப் பட்ட நாள் முதல் அற்புதங்கள் நடை பெற்றன. அவர் தேவனுக்காக நெருப்பா யிருந்தார். பிரான்சிஸ் W.டிக்ஸன் அவரைக் குறித்து, "அவரது பிரசங்கத்தின் வல்லமை அவரது சபை மக்களின் சன்மார்க்க நெறியின் தாக்கம் ஆகியவை மிகவும் அதிகம். பக்கத்து கிராமத்தில் வாழ்ந்த முக்கிய போலீஸ் அதிகாரி தனது நன்றியை பகிரங்கமாக அறிவிக்க ஏதுவா யிருந்தது. ஏனெனில் பட்டணம் முழுவ தும் தேவ அன்பால் நிரம்பி கொழுந்து விட்டு எரியும் இதயம் படைத்த மக்களால் நிரம்பியிருந்தது" என்று கூறுகிறார்.

இதயம் அனலால் நிறைந்த ஜான் வெஸ்லியிடம் ஒரு துணை ஊழி யர் அதிகமான ஜனங்கள் கூடி வர என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவர், 'பிரசங்கிப்பவர் எரிந்து பிரகாசித்தால் மக்கள் அதைப் பார்க்கக் கூட்டமாக வருவார்கள்' என்றாராம்.

வெஸ்லியின் சரித்திரத்தை எழு திய ஒருவர் அவரை 'தமது மூச்சினால் ஆத்துமாக்களைப் பின்தொடர செய்ப வர்' என்று குறிப்பிட்டுள்ளார். ஆடம் கிளார்க் என்பவரின் கல்லறையில் 'பிறருக்காக வாழ்வதில் நான் எரிந்து விட்டேன்' என எழுதப்பட்டுள்ளது. இவர் ஆரம்பகால மெதடிஸ்ட் சபையைச் சார்ந்தவரும் வெஸ்லியின் உபதேசத்தில் வளர்ந்தவருமாவர்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பாக T.டெவிட் டால்மேஜ் இப்படி எழுதி யிருக்கிறார்: "இந்த யுகத்தில் எல்லா வற்றிற்கும் மேலாக நமக்குத் தேவையா யிருப்பது தேவனுடைய பரிசுத்த அக்கினி - அதுவே மனிதருடைய உள்ளத்தில் எரிய வேண்டும், அவர்கள் மூளையைத் தூண்ட வேண்டும், அவர்கள் உணர்ச்சி களை எழுப்ப வேண்டும், அவர்கள் நாவுகளைப் புல்லரிக்கச் செய்ய வேண்டும், அவர்கள் முகங்களைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும், செயல் களில் துடிப்பை ஏற்படுத்த வேண்டும், புத்தியின் சக்தியை அகலப்படுத்தி அனைத்து அறிவையும் ஒன்றிணைக்க வேண்டும். இவ்வாறு எரியும் நீரோ டையை ஏற்படுத்த வேண்டும்". இந்த ஸ்நானம் இறங்கி நம்மில் ஆயிரக்கணக் கானோர் சாதாரணமானதும், பெலவீன மான ஊழியக்காரராயிருப்பதால் நம்மை வல்லமையுள்ளவர்களாக்க முடியும்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக போலந்து நாட்டைச் சேர்ந்த ஒரு போர்வீரன், Dr.ஹெரால்டு ஜான் ஒக்கென்கா என்பவரிடம், "போலந்தில் கிறிஸ்தவத்துக்கும் கம்யூனிசத்துக்கு மிடையில் ஒரு பந்தயமிருக்கிறது. எது கொண்டு வரும் செய்தி அக்கினி ஜுவாலையாக இறங்குமோ, அதுவே வெற்றி பெறும்" என்று சொன்னான்.

வாஞ்சையற்ற கிறிஸ்தவம் நரகத்தின் அக்கினியை அவிக்க முடியாது. காட்டுத் தீயை அணைக்க நெருப்பையே பயன்படுத்த வேண்டும். உத்தமமற்ற ஒரு ஊழியக்காரன் ஜனங்கள் அனல் பெறச் செய்ய முடியாது. வாஞ்சையற்ற வாலிப தலைவர் வாலிபர்களைக் கிறிஸ்துவுக்காக நடத்த முடியாது. நாம் பற்றி எரியாமல் பிறரிடம் இதைக் குறித்து பேச முடியாது. பிஷப் றால்ஃப் ஸ்பால்டிங் குஷ்மான் இவ்வாறு ஜெபித்தார்: "உலகம் அழியும் போது நாங்கள் எங்கள் சொந்த வழியிலே போகிறோம். நாங்கள் பற்றி எரியச் செய்யும் கர்த்தாவே என ஜெபிக்கிறோம்! ஒவ்வொரு நாளும் நோக்கமின்றி பாரமின்றி செல்லும் எங்களை பற்றி எரியச் செய்யும் ஆண்டவரே, எங்களை எழுப்புவீராக என ஜெபிக்கிறோம்"

இதைத் தவிர பெரிய தேவை நமது சபைகளிலோ பாடசாலைகளிலோ இல்லை. விசுவாசத்திலும், இருதயத்திலும் சுவிசேஷ வாஞ்சை இருந்தால் மட்டும் போதாது, நாம் கிறிஸ்துவினால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட வேண்டும், அவரது அன்பினாலும் கிருபையினாலும் நிரப்பப்பட வேண்டும்; அவரது வல்லமையாலும் மகிமையாலும் பற்றி எரிய வேண்டும். நமது உடலின் ஒவ்வொரு பகுதியும், நமது பாடல் வரிகளிலும் தேவனுடைய தெய்வீக அக்கினி பிரகாசிக்க வேண்டும். **பலியிடுவதற்கான கட்டை போதாது, பலி பீடம் போதாது, பலிப்பொருளும் போதாது, ஆனால் அக்கினி வேண்டுமே.** தெய்வீக அக்கினி நம்மீது இறங்க வேண்டும். கர்த்தாவே எங்களைப் பற்றி எரியச் செய்யும்.

தேவன் நம்மை வைத்த இடத்தில் முரட்டாட்டம் பண்ணுகிறோமா? ஆவியானவரின் அக்கினி அபிஷேகம் நமக்கு வேண்டும். தூங்குகிற நமது சபையை விழித்தெழச் செய்ய, அன்று மேல்வீட்டறையில் காத்திருந்த ஒவ்வொருவர் மேலும் இறங்கிய பரிசுத்த அக்கினி இறங்க வேண்டும். நம் அனைவருக்குமே இந்த அக்கினி மிகமிகத் தேவை.

'தேவ அக்கினியே பற்றி எரி' என்ற தலைப்பில் T.A.ஹீகர் என்பவர் இவ்வாறு எழுதுகிறார்: அக்கினிதான் நமக்குத் தேவை, நமது குளிர்ந்த உணர்வுகளைத் தூண்டவும், கிறிஸ்து இல்லாத கல்லறைக்குச் செல்லும் மக்களுக்காக ஏதேனும் செய்ய நம்மை உந்தவும் அக்கினி வேண்டும். **அறிவிக்கப்படாத கோடிக்கணக்கான மக்கள் அழிந்து போகிறார்களே. காரணம் நம்மில் அக்கினி இல்லை.** எனவே பரிசுத்த ஆவியின் அக்கினி தேவை.

காட்டுத் தீ நமக்கு அவசிய மில்லை. அது நமது கிறிஸ்துவை மகிமைப் படுத்தாது. ஆனால் தூய அக்கினியால் தூய ஆவியானவர் நம்மை அபிஷேகம் செய்ய வேண்டும். கிறிஸ்துவுக்காகத் தேவைப்பட்டால் ஜீவனையும் அர்ப்பணிக்க ஆயத்தமாயிருந்த ஆதித்திருச் சபையின் மக்களில் காணப்பட்ட உற்சாகமும், அக்கினியும் நம்மில் வேண்டும்.

ஒரு கடினமான பிரசங்கத்தில் ஜான் R.றைஸ் என்பவர் நமது அனலற்ற தன்மையைக் கடிந்து கொண்டார். "கவனியுங்கள் கடினமாயிருப்பவர்கள் பாவிகளல்ல. பிரசங்கிக்கிறவர்கள்தான் கடினமாயிருக்கிறார்கள். வேதபாட சாலை ஆசிரியர்கள், சபை டீக்கன்மார்கள், ஊழியக்காரர்கள், மூப்பர்கள் போன்றவர்கள்தான் கடினமாயிருக்கிறார்கள். ஆத்துமாக்களுக்காக நெருப்பாய் பிரசங்கிக்கிற ஒருவரை கண்டுபிடிப்பதை விட ஒரு குடிகாரனையோ, விபச்சாரியையோ மனந்திரும்பச் செய்வது எளிது" என்று அவர் அறைகூவல் விடுத்தார்.

ஜார்ஜ் உவைட்ஃபீல்டு தேவனால் வல்லமையாக பயன்படுத்தப் பட்ட ஊழியக்காரர். அவரும் ஜான் வெஸ்லியும் இங்கிலாந்தை கிறிஸ்துவுக்காகத் தலைகீழாக மாற்றினவர்கள். பிரிட்டீஷ் தீவுகளை பிரஞ்சு புரட்சியாளர்களிடமிருந்து தேவகிருபையால் இரட்சித்தார்கள். அவரைக் குறித்து, "அவர் இளைஞனாக இருந்த காலத்திலிருந்து அவர் பிரசங்கித்த மரண காலம் வரை அவர் ஆத்தும தாகம் நிறைந்த வராகக் காணப்பட்டார். அவரது வாழ் நாள் முழுவதும் அவரது ஆத்துமா மனித இரட்சிப்புக்காக பற்றி எரியும் சூளையாகஇருந்தது" என்று சொல்லப்பட்டது.

அவரது ஆத்துமா ஒரு 'பற்றி எரியும் சூளை'. அங்குதான் இரகசிய மிருக்கிறது. நமது துக்கமான பிரச்சனை என்னவெனில் தேவ ஜனங்களை உண்மையாகவே அவர்கள் இருதயங்கள் பற்றி எரியாத நிலையில் அவர்களை நடத்துகிறோம், அல்லது பற்றி எரியும் இருதயங்களில் நெருப்பு அணைந்த நிலையில் நடத்துகிறோம். கர்மேல் பர்வதத்தில் அக்கினி இறங்கும் வரை எலியா ஜெபித்தான். அப்போது பின்மாற்றமடைந்த ஜனங்கள் "கர்த்தரே தேவன் - கர்த்தரே தேவன்" எனக் கூறி ஆப்பரித்தார்கள் *1ராஜா.18:39.*

ஷெக்கெய்னா அக்கினி அன்று சீனாய் வனாந்தரத்தில் மோசேயின் முகத்தை மக்கள் பார்க்கக் கூடாமல் தேவ மகிமையால் பிரகாசித்தது போல *(யாத்.34:29-30)* நாமும் தேவனிடம் நெருங்கிச் சேர்ந்து, ஷெக்கைனா அக்கினி நமது மண்பாண்டங்களை மறுரூபப் படுத்தி விடுவதால் மக்கள் தேவ மகிமையை நம்மேலும், நம்மிலும் காண வேண்டும்.

எசேக்கியேல் பார்த்த ஷெக்கைனா படிப்படியாக இஸ்ரவேலிலிருந்து நம்மிடம் இன்று திரும்பி வரக் கூடுமா? *(எசேக்.அதி.10-11).* அது மேலறையில் கூடியிருந்த 120 பேர் மேலும் திரும்பி வந்தது. *(அப்.2:1-21).* நாமும் காத்திருந்தால் இந்த அனுபவத்தைப் பெறலாம்.

இதனை சம்பாதிக்கவோ, செயல்களினாலோ, தூண்டுவதாலோ பெற முடியாது. தேவன் ஒருவரே அக்கினியால் நம்மை ஞானஸ்நானப்படுத்த முடியும். அவர் ஒருவரே ஷெக்கைனாவை அனுப்பக்கூடும். உங்கள் தேவையையும் எனது தேவையையும் அவர் ஒருவரே பூர்த்தி செய்ய முடியும். இந்த அபிஷேகமின்றி பலகாலம் நாம் உழைத்து விட்டோம், எனவே நாம் அவரது மகிமையை இழந்து விட்டோம், மக்களும் உயிரடையாமல் செய்து விட்டோம்.

இந்த அக்கினியைப் பற்ற வைக்கலாம். ஆனால் அதை உருவாக்க முடியாது. தேவனுக்கு முன்பாக உத்தமமாக நமது பாவங்களை அறிக்கையிடுவோம். அப்போது தேவன் தமது பரிசோதனை விளக்கால் நமது இருதயத்திலிருப்பதை நமக்குக் காண்பிப்பார். நாம் நிரப்பப்படவும் பெலப்படுத்தப் படவும் தடையாய் நமது வாழ்விலிருப்பவை நமக்குக் காண்பிக்கப்படும்.

தேவனுடைய பரிசுத்த அக்கினி ஆயத்தமும், கீழ்ப்படிதலும் வாஞ்சையும் உடைய இருதயங்களில்தான் இறங்கும், ஆனால் நாமோ போதுமான பசிதாகமற்றவர்களாகவும் நமது ஆசை முழுமனதோடும் காணப்படவில்லை.

"பொல்லாதவர்களாகிய நீங்கள், உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" *லூக்,11:13.*

வாஞ்சையற்ற கிறிஸ்தவம் நரகத்தின் அக்கினியை அவிக்க முடியாது. காட்டுத் தீயை அணைக்க நெருப்பையே பயன் படுத்த வேண்டும்.

தூய ஆவியால் புதுப்பிக்கப்படுதல்

Renewal by the Holy Spirit

Charles H. Spurgeon

எழுப்புதலைப் பெற்றுக் கொள்ள நாம் நேரடியாக தூய ஆவியான வரிடம் செல்ல வேண்டும். உண்மையான சக்தி வாய்ந்த பரம அக்கினிப் பொறி தூய ஆவியானவரிடமிருந்து வருகிறது. ஆசாரியர்கள் அந்நிய அக்கினியைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். தூய ஆவியானவரைப் போல வல்லமை நிறைந்தது எதுவுமேயில்லை. எனவே நாம் வல்லமையில் குன்றி விட்டால் அதைப் புதுப்பித்துக் கொள்ள முதலாவது நம்மில் அதைத் தூண்டி எழுப்பிய அவரிடமே செல்ல வேண்டும்.

ஸ்காட்லாந்த் தேசத்தின் இரத்தம் சிந்தும் அரசியான மேரியின் தீய ஆட்சிக்கு எதிராக நடுக்கத்தையும் திகிலையும் ஏற்படுத்திய ஜான் நாக்ஸ் போன்ற தேவ பிள்ளைகளின் ஜெபம் எங்கே?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)
அப்படியானால் வெயில் சுட்டெரிக் கிறதே! என்று கேட்கிறீர்களா? தயவு செய்து வெளிப்படுத்தின விசேஷம் *16:8,9* பார்க்கவும்.

3. சேலம் மாவட்டத்திற்காக

இரண்டு சதவீதத்திற்கும் குறைவாக இருக்கும் கிறிஸ்தவர்கள் உயிர் மீட்சி அடைய

எல்லா ஊழியர்களுக்காக

எல்லா ஊழியங்களுக்காக

இந்த ஜெபகுறிப்புக்காக ஒரு சகோதரர் முன்பாக வந்து பாரத்தோடு ஜெபித்தார்கள்.

4. எழுப்புதலுக்காக இதய கதறல் 2017,2018

i. இடங்கள் ஒழுங்கு செய்யப் பட

ii. திரளான விசுவாசிகள் உபவாச ஜெபத்தில் உற்சாகமாய் பங்குபெற

iii.தமிழ் நாட்டில் உயிர் மீட்சி உண்டாக

என்னுடைய அழைப்பை அன்பாக ஏற்று மிகவும் சிறிய ஒரு பெண் முன்பாக வந்து ஜெபித்தது மிகவும் மகிழ்ச்சியாயிருந்தது.

5. இடத்தை தந்து அனைத்து உதவிகளையும் செய்த ஸ்தல போதகர் பாஸ்டர் **M.தைரியநாதன்,** அவருடன் ஒத்துழைத்த பாஸ்டர் **M.S.ராஜேந்திரன்,** பாஸ்டர் **S.M.ஜேக்கப்** ஆகியோருக்காக வும், சபையாருக்காகவும், உபவாச ஜெபத்தில் வந்து கலந்து ஜெபங்களை ஏறெடுத்த பிற சபைகளின் போதகருக் காகவும், உபவாச ஜெபத்தில் கலந்து கொண்ட அனைத்து விசுவாசிகளுக்கா கவும், அவர்கள் தேவைகளுக்காகவும், நம் சகோதரர் ஒருவர் மிகவும் பாரத்தோடு ஜெபித்தார்கள்.

உபவாச ஜெபத்திற்கு பிற்பாடு இதனை ஒழுங்கு செய்ய உதவியா யிருந்த தூதன் வாசகரும், போதகருமான S.M.**ஜேக்கப்** அவர்கள் எங்களை மிகவும் அன்புடன் தங்களுக்கு சொந்தமான சபைக்கு அழைத்துச் சென்றார்கள். அவரும், அவர் குடும்பத்தினரும் எங்களுக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல அப்.*28:2*.

இந்த உபவாச ஜெபத்திற்காக அடியான் ஆயத்தமாகி கொண்டிருக் கும்போது, தற்செயலாக ஒரு மிஷனெரி பத்திரிகையை படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. சேலம் மாவட்டத்தை கள ஆய்வு செய்து 3 பக்கங்கள் எழுதப்பட் டிருந்த அக்கட்டுரையிலிருந்து சில பகுதிகளை அங்கே பகிர்ந்து கொண்டேன், சிலவற்றை கீழே அச்சிடுகிறேன்:

சைலம் என்ற பெயருக்கு மலைகள் சூழ்ந்த இடம் என்று பொருள். எட்டு மலைகள் நிரம்பிய மாவட்டம் சேலமாகும். சேர்வராயன் மலை, கஞ்ச மலை, ஜெருகு மலை, கொடு மலை, கல்வராயன் மலை, பச்ச மலை, மேட்டூர் மலை, நகர மலை போன்றவை இம்மாவட்டத்தில் உள்ளன. சேரன் ஆண்ட நிலமாதலால் **சேரலம்** என்று அழைக்கப் பெற்று, சேலம் என்று மருவி விட்டதாகச் சொல்வர். SALEM என்ற ஆங்கில பதத்தை S-Steel, A-Aluminium, L-Lime Stone, E-Electricty, M-Mangoes என்றும் விளக்கம் கொடுப்பர். சேலம், கொங்கு மண்டலத்தின் ஒரு முக்கிய மாவட்டம். கி.பி.*1885*இல் சேலம் மாகாணம் பிரிக் கப்பட்டு, வேலூர், விழுப்புரம் போன்ற பகுதிகள் பகுக்கப்பட்டன. மேலும் ஆத்தூர், தர்மபுரி, ஓசூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், திருச்செங்கோடு, திருப்பத்தூர், ஊத்தங்கரை போன்ற பகுதிகளும் பிரிக்கப்பட்டன. இத்தனை சிறப்பான சேலம் மாவட்டத்தில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையோ 2 சதவீதத்திற்கும் கீழிருப்பது தமிழகக் கிறிஸ்தவர்களின் கவனம் இம்மாவட்டத்தின் மேல் இல் லையோ என எண்ணத் தோன்றுகிறது.

கிறிஸ்தவர்கள்: *2001* கணக்கெடுப் பின்படி *1.67* சதவீதமாக இருந்த கிறிஸ் தவர்கள் இன்று *2011* கணக்கெடுப் பின்படி *1.55* என்று குறைந்து விட்டதன் காரணம்தான் என்ன? இம்மாவட்டத் தின் மொத்த கிறிஸ்தவர்களின் எண் ணிக்கை *53,841*. சேலம் நகரத்தில் மட்டும் *19,708* கிறிஸ்தவர்கள் இருக்கி றார்கள். மேட்டூர், கங்காவலி, ஏற்காடு, ஓமலூர், சங்ககிரி, தம்மம்பட்டி மற்றும் செந்தாரப்பட்டி ஆகிய இடங்களில் குறைவான கிறிஸ்தவர்களே உள்ளனர். இம்மாவட்டத்தின் நகரங்களில் கிறிஸ்த வர்கள் நிறைந்து இருப்பதன் காரணம் நோக்கின் வேலை வாய்ப்புக்கென்று தென் தமிழகத்திலிருந்து வந்தவர்களா யிருக்குமோ? மேட்டூர் அணை, ஏற்காடு முயற்சிகளோடு கிறிஸ்தவர்களின் சகாப் தம் சேலம் மாவட்டத்தில் முடிந்து போயிற்றோ? இன்று இங்கு ஊழியம் அரிதா?

நம்முன் நிற்கும் சவால்: இந்தியாவின் வெகு நீளமான பயணியர் நடைமேடை கொண்டது சேலம் மின் தொடர் வண்டி நிலையம். இந்தியாவின் எந்த மூலையிலிருந்தும் சேலம் வந்து சேர போக்குவரத்து வசதி உண்டு. விவசாயம், வியாபாரம், விமானத்தளம், கல்வி, மருத்துவம், வெள்ளி மற்றும் இதர அணிகலன் தயாரிப்பு, ஏனைய சிறு தொழில் வளர்ச்சிகளால் சேலம் மாவட் டம் முன்னேற்றப் பாதையில் முனைந்து செல்கின்றது. ஆனால், சேலம் மாவட் டத்தில் மக்கள் நற்செய்தியினால் முழு வதும் சந்திக்கப்படாமல் இருப்பது ஏனோ?

II. ஏப்ரல் மாதம் *3*-வது சனிக்கிழமை *(15-04-2017)* நடைபெறும் உபவாச ஜெபத்திற்காக ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்! *(விளம்பரம் பார்க்க)*

III. கர்த்தருக்குச் சித்தமானால் ஏப் ரல் மாதம் நான்காவது ஞாயிறு *(23-4-2017)* காலை தஞ்சாவூரில் உள்ள **கிரேஸ் அசெம்பிளி ஆப் காட்** சபையின் இரண்டு ஆராதனைகளிலும் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பேன். மேலும் விபரங்களுக்கு தூதன் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

IV. மேய் மாதம் *3*-வது சனிக்கிழமை காரைக்கால் மாவட்டம் **T.R. பட்டினத்தில்** நடைபெற இருக்கும் உபவாச ஜெபத் திற்காக தயவு செய்து ஜெபியுங்கள்!

V. கர்த்தருக்குச் சித்தமானால் ஜூன் மாதம் **நாகர்கோவில்** பட்டணத்தில் நடைபெற இருக்கும் உபவாச ஜெபத் திற்காக ஜெபியுங்கள்! இந்த உபவாச ஜெபத்தை நம்முடன் இணைந்து உபவாச ஜெபத்தை நடத்தும் True Life Mission உத்திரபிரதேசம் பொறுப்பெடுத் திருந்தாலும், நாமும் அவர்களுடன் இணைந்தே நாகர்கோவில் உபவாச ஜெபத்தை ஒழுங்கு செய்து நடத்துகிறோம்.

நாகர்கோவிலில் ஜூன் மாதம் நடை பெறும் உபவாச ஜெபத்திற்கு சென்னை முதல் கேரளா வரை உள்ள வாசகரை அதிக அன்போடு அழைப்பதில் அடியேன் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

வருகையின் தூதன் அலுவலகத்தில் இருந்து பார்த்தால் தெரியும் **ஆண்கள் ஐக்கிய சங்க ஹால்** *(ஹோம் சர்ச் அருகில்)* வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

மேலே எழுதப்பட்ட ஆசிரியர் கடிதம் வரைக்கும் கம்யூட்டரில் டைப் செய்யப்பட்டு, அச்சிட ஆயத்தமா யிருந்தாலும், தாமதமாகிக் கொண்டே யிருந்தது. தூதன் வாசகரில் அநேகர் தேவனையும், தூதன் ஊழியத்தையும், காலஞ் சென்ற எனது தகப்பனார் பாஸ்டர் **S.தேவதாசன்** *(முன்னாள் ஆசிரியர்)* அவர்களையும், தற்சமயம் என்னையும் அதிகமாய் நேசிப்பதாலும், **அதிகமாய் ஜெபிப்பதற்காகவும், கர்த்தருக் குள் நாங்கள் படும் பிரயாசத்தை** *(1கொரி. 5: 58)* உங்களுக்கு எழுதி அறிவிப்பது எனக்கு நலமாய் தோன்றுகிறது.

முதலாவது, இந்த ஊழியத்தை என்னுடன் இணைந்து செய்யும் மகனு டைய மனைவியும் இரண்டு பிள்ளை களும் சுமார் இரண்டு வாரமாக சுகவீன மாய் இருந்தார்கள். இதில் சுமார் ஒரு வாரம் மருத்துவமனையில் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இந்த நெருக்கடியான சூழ்நிலை யினால் தூதன் அச்சிட தாமதமானது. எனவே மார்ச் மாதம் *18*-ம் தியதி அதிகாலை *4.30* மணிக்கு **ஒட்டன் சத்திரம்** உபவாச ஜெபத்திற்கு ஜெபத்தோடு ஒரு வாகனத்தில் சென்றோம். **எழுப்பு தலுக்காக இதய கதறல்** *7* மணி நேர உபவாச ஜெபத்தை ஆண்டவருக்கு மகிமையாக நடத்திட தேவன் இரக்கம் பாராட்டினார்.

பள்ளி பருவத்திலே நாகர்கோவிலில் எங்கள் வீட்டின் மிக அருகில் வசித்த வரும், எனக்கும், எனது தகப்பனா ருக்கும் மிகவும் அருமையானவருமான பாஸ்டர் **Dr.செல்வின்** அவர்கள் இந்த உபவாச ஜெபத்தை உதவி ஊழிய ரோடு ஜெபத்துடன் மிக நேர்த்தியாக ஒழுங்கு செய்திருந்தார்கள்.

கூட்டம் முடிந்தபின் தற்செயலாக இரண்டு சகோதரிகளை சந்திக்க நேர்ந் தது. ஒரு சகோதரி தன்னுடைய பிள்ளை களின் இரட்சிப்பிற்காக ஜெபிக்க கேட்டுக் கொண்டார்கள். இன்னொரு

சகோதரியைப் பார்த்து, நான் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்று கேட்டேன். திருமணம் ஆகி 18 ஆண்டுகள் ஆகிறது, குழந்தை இல்லை என்று கூறினார்கள். அவர்களுக்காக ஜெபித்தபின், இன்னொரு தம்பதி ஜெபிக்க காத்துக் கொண்டு நின்றார்கள். ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் அந்த சகோதரன் 10 ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை, இரண்டு முறை கருச் சிதைவு ஏற்பட்டது என்று கூறினார்கள். இவர்களுக்காகவும் கர்த்தருடைய நாமத்தில் ஜெபித்தேன். தூதன் வாசகர் களாகிய நீங்கள் இப்படிப்பட்டவர் களையும் உங்கள் ஜெபங்களில் நினைவு கூரும்படி மிகவும் பட்சமாய் கேட்கிறேன். உபவாச ஜெபத்தை முடித்து இரவு வீடு வந்து சேர்ந்து நித்திரை செய்யும்போது இரவு 12.00 மணி ஆகியிருந்தது. எல்லா மகிமையும் கர்த்தர் ஒருவருக்கே! வெளி.4:11

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
WESLEY DEVADASON

தொலைபேசி: 95432 21008
94897 40295
10.00 - 1.00; 2.00 - 6.00

உனது ஜெப வாழ்க்கை இரகசியமாயிருக் கட்டும்; உனது இரகசிய வாழ்க்கை பரிசுத்தமாயிருக்கட்டும்.

ஏப்ரல் மாத உபவாச ஜெபம்

Heart Cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக
இதய கதறல்–2017

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : 15–04–2017
3–வது சனிக்கிழமை

சமயம் : காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

இடம் : J.J. திருமண மண்டபம், காவல் நிலையம் அருகில் ஏரல்

தொடர்பு : சகோ. R.A.**சுந்தர் ராஜ்,** ஏரல்
மொபைல்: 94874 14255

பத்திரிகை செய்திகள்

தபால் துறை நடத்தும் வங்கி சேவை ஏப்ரல் 1–ந் தேதி தொடங்குகிறது

சென்னை மார்ச்.7

தமிழகத்தில் தபால் துறை, வரும் ஏப்ரல் 1–ந் தேதியில் இருந்து "போஸ்டல் பேங்க்" என்ற வங்கி சேவையை தொடங்குகிறது.

வங்கிகள்

தமிழகத்தில் தேசிய வங்கிகள், தனியார் வங்கிகள் உள்ளிட்ட அனைத்து வங்கிகளுமே சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

மத்திய அரசின் பல்வேறு திட்டங்களின் பயனை பெறுவதற்கு வங்கிக் கணக்கு எண் அவசியமாகி விட்டது. அதோடு பண மதிப்பு குறைப்பு நடவடிக்கையால், மக்களின் அன்றாட வாழ்க்கை யில் வங்கிகளின் அவசியம் அதிகரித்த வண்ணம் உள்ளது.

பண பரிவர்த்தனை உள்ளிட்ட சேவைகளுக்கு சில வங்கிகளில் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சில வங்கிகளில் டெபாசிட் தொகையில் குறைந்த பட்ச தொகை அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

தபால்துறை

இந்த நிலையில், தபால் துறையும் வங்கி சேவையில் ஈடுபட இருக்கிறது. இது குறித்து தபால்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

வங்கி வர்த்தகத்தில் இணைவது தொடர்பாக இந்திய ரிசர்வ் வங்கியுடன் ஏற்கனவே தபால் துறை பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. குறிப்பிட்ட எண்ணிக் கைக்கு மேல் வங்கி கணக்குகள் பெறப்பட்டால் தான் வங்கி வர்த்தகத்தை தொடங்க முடியும் என்று ரிசர்வ் வங்கி அறிவுறுத்தி இருந்தது.

எனவே, மக்களிடம் இருந்து கணக்குகளைப் பெறுவதற்கு தபால்துறை ஊழியர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். அதன்படி, அரசு அலுவலகங்கள் உள்பட பல்வேறு இடங்களுக்குச் சென்று, விண்ணப் பங்களைக் கொடுத்து கணக்கு சேகரிக்கப்பட்டு வருகிறது.

ஏப்ரல் 1–ந் தேதி முதல்

தபால் துறையின் வங்கி சேவைக்கு, "போஸ் டல் பேங்க்" என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த சேவையை வரும் ஏப்ரல் 1–ந் தேதியில் இருந்து தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் சேர்வதற்கு ஆதார் அட்டை போன்ற ஏதாவது அரசு அங்கீகாரம் பெற்ற அடையாள அட்டையை கொடுத்தால் போதும். குறைந்தபட்ச அளவாக ரூ.100 டெபாசிட் செய்ய வேண்டும். அதை விண்ணப்பத்துடன் தர வேண்டும்.

ஏ.டி.எம். அட்டை

இதில் சேர்பவர்களுக்கு ஏ.டி.எம் அட்டை, ரகசிய எண், வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றை தபால் துறை வழங்கும். ஏ.டி.எம் அட்டை மூலம் வேறு எந்த வங்கிகளின் ஏ.டி.எம் எந்திரத்தில் இருந்தும் பணம் எடுக்க முடியும். இதற்கு 4 ஆண்டுகளுக்கு சேவை கட்டணம் கிடையாது. அதோடு 'நெட் பாங்கிங்' வசதியும் செய்து தரப்படும்.

மற்ற வங்கியில் நடக்கும் பணப்பரிமாற்றம் போலவே இந்தியா முழுவதிலும் 'போஸ்டல் பேங்க்' மூலம் பண பரிமாற்றம் செய்யலாம். தபால் அலுவல கத்தில் 'போஸ்டல் பேங்க்'காக தனி இடம் அளிக்கப் பட்டு இருக்கும். தபால் துறையின் மற்ற சேவை களும் தொடர்ந்து நடக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

குமரி மாவட்ட அணை பகுதியில் பலத்த மழை

நாகர்கோவில், மார்ச் 10

குமரிக்கடல் முதல் வட மாநிலம் வரை குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டுள்ள தாகவும், இதன் காரணமாக தமிழகத்தில் தென் மாவட்டங்களிலும், உள் மாவட்டங்களிலும் மழை பெய்யும் என்றும் வானிலை மையம் அறிவித்தி ருந்தது. அதன்படி குமரி மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக மழை பெய்தது.

பெருஞ்சாணி அணை பகுதியில் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்தது. அங்கு அதிக பட்சமாக 63.மி.மீ. மழை பதிவாகியிருந்தது. இது போல புத்தன் அணை, திற்பரப்பு ஆகிய பகுதிகளி லும் மழை கொட்டியது.

நாகர்கோவில் மற்றும் சுற்று வட்டார பகுதி களில் நேற்று வானில் அவ்வப்போது கருமேகங்கள் தோன்றி மறைந்தன. ஆனால் மழை பெய்ய வில்லை. குமரி மாவட்டத்தில் நேற்று காலை 8 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு (மி.மீட்டர்) வருமாறு:–

பேச்சிப்பாறை –2, சிற்றார் 1–2.8, சிற்றார் 2–2.8, மாம்பழத்துறையாறு – 9, அடையாமடை – 3, புத்தன் அணை – 61.4, திற்பரப்பு – 49.6, சுருளோடு – 27.5, பாலமோர் – 1.6.

மழை பெய்வதால் அணைகளுக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நேற்றைய நிரவரப்படி பேச்சிப்பாறை அணைக்கு131 கனஅடி தண்ணீர் வந்தது. அணையின் நீர்மட்டம் 4.10 அடியாக உள்ளது. அணையிலிருந்து 61 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதுபோல் சிற்றார் 1 அணைக்கு 1.2 கனஅடி தண்ணீரும், சிற்றார் 2 அணைக்கு 50 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருந்தது. இந்த 2 அணைகளுக்கும் வந்த தண்ணீர் அப்படியே திறந்து விடப்பட்டது.

தினத்தந்தி

Registered with the Registrar of News Paper For India under R.N.I. 11967/'67
Postal Reg. No. KKI/63/2015-2017
Date of Publication : 27th of Every month
Date of Posting : 27th & 28th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To